பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 09 2024 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆழ்கடல் பகுதியில் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பது தொடர்பான ஐ.நா. சர்வதேச ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- உஸ்பெகிஸ்தான் அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தைகள் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு, தற்போது விற்பனையில் இருந்து வரும் 50 மருந்துகளை தரமற்றவை என அறிவித்துள்ளது.
- அமலாக்கத்துறை வழக்கில் முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜிக்கு உச்சநீதிமன்றம் இன்று நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.
- ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் சென்னை அணி - முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஆழ்கடல் பகுதியில் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பது தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் தேசிய அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்க ஒப்பந்தத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கையெழுத்திட்டார்.

கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும், ஆழ்கடல் பகுதியில் பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிப்பதையும் இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கடல் சூழலை மாசுபடுத்துவது மற்றும் அழிவை ஏற்படுத்தும் வகையில் மீன்பிடிப்பது உள்ளிட்டவற்றுக்கு இந்த ஒப்பந்தம் தடை விதிக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஆழ்கடல் வளங்கள் மீது எந்தவொரு நாடும் இறையாண்மை உரிமைகளை கோர முடியாது.

கடந்த ஜூலை மாதம் இந்த ஒப்பந்தத்தில் இந்தியா பங்கேற்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தான் அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தைகள் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் அமைந்தது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. **Shavkat Mirziyoyev**–ஐ சந்தித்துப் பேசிய நிதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அந்நாட்டின் துணைப் பிரதமர் மற்றும் வர்த்தக தொழில்துறை அமைச்சரோடு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விவாதித்ததாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையேயான பணப் பரிவர்த்தனை மற்றும் நிதிச் சேவை தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலமாக மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள் அதிக அளவில் பயனடைவார்கள் என்று திருமதி நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்தார்

பசுமை தொழில்நுட்பம், வானிலை தொடர்பான செயல்பாடுகளில் உஸ்பெகிஸ்தான் அளித்து வரும் ஒத்துழைப்பினை அவர் பாராட்டினார்.

இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் இடையிலான இருதரப்பு உறவு மேலும் வலுப்பெற்றுள்ளதாகவும், இருநாடுகளும் வரலாற்றுத் தொடர்பைக் கொண்டவை என்றும் உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. **Shavkat Mirziyoyev** தெரிவித்தார்.

மேலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயலாற்றும் இந்தியாவின் முடிவினை தாம் வரவேற்பதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 57 புள்ளி பூஜ்ஜியம் மூன்று சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக ஸ்ரீமாதா வைஷ்ணவ் தேவி தொகுதியில் 80 புள்ளி ஏழு நான்கு சதவீத வாக்குகளும், அதற்கு அடுத்தபடியாக சூரன்கோட் தொகுதியில் 74 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளன.

இரண்டாம் கட்ட தேர்தலில் அதிக அளவு மக்கள் வாக்களித்ததற்கு நன்றி தெரிவிப்பதாக ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அங்கு மூன்றாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குபதிவு நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சியினரின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, இன்று உதம்பூர் மற்றும் கத்துவாவில் நடைபெறும் அக்கட்சிப் பேரணியில் பங்கேற்றுப் பேசுகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் ஜம்முவில் நடைபெறும் பிஜேபி பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி ஜம்முவில் நேற்று வாக்கு சேகரித்தார்.

மக்கள் ஜனநாயகக் கட்சித்தலைவர் திருமதி மஹபூபா முஃப்தி, நேற்று அக்கட்சி சார்பில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்றார்.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதியன்று ஜம்மு-கஷ்மீரில் 40 தொகுதிகளில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

<<<<>>>>

ஹரியானாவில் ஒரேகட்டமாக அடுத்த மாதம் 5ஆம் தேதியன்று சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது.

இதையொட்டி அம்மாநிலத்தில் அரசியல் கட்சியினரின் பிரச்சாரம் அடுத்தகட்டத்தை எட்டியுள்ளது.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி இன்று கர்னல் மாவட்டத்தில் நடைபெறும் காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார்.

இதைத் தொடர்ந்து ஹிசார் மாவட்டத்தில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டத்திலும் பங்கேற்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜம்மு-கஷ்மீர், ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 8ஆம் தேதியன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு, தற்போது விற்பனையில் இருந்து வரும் 50 மருந்துகளை தரமற்றவை என அறிவித்துள்ளது.

இது தொடர்பான அதன் மாதாந்திர அறிக்கையில் இந்த மருந்துகளின் பயன்பாடு சுகாதாரப் பாதுகாப்பற்று இருப்பதாக கூறியுள்ளது.

பாராசிட்டமால், வைட்டமின்**B** காம்ப்ளக்ஸ், கால்சியம் உள்ளிட்ட இம்மருந்துகள் போதுமான தரத்தில் இல்லையென்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சியாச்சின் ராணுவ முகாமுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இதையொட்டி அவர் இன்று **Thoise** விமான நிலையம் சென்றடைந்தார். லடாக் துணைநிலை ஆளுநர் டாக்டர் பி.டி மிஸ்ரா அவரை வரவேற்றார்.

சியாச்சினில் பணியில் உள்ள ராணுவத்தினருடன் குடியரசுத்தலைவர் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மகாராஷ்டிரா செல்கிறார்.

புனேவில் இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் 22 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பிடேவாடாவில், சாவித்ரிபாய் பூலேவின் முதல் பெண்கள் பள்ளியின் நினைவுச் சின்னத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

சூப்பர் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பத் துறையில், இந்தியாவை தற்சார்புடைய நாடாக மாற்றும் நோக்கில், தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் கீழ் உள்நாட்டிலேயே 130 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட மூன்று பரம் ருத்ரா சூப்பர் கம்ப்யூட்டர்களை திரு நரேந்திரமோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் புனே, தில்லி மற்றும் கொல்கத்தாவில் முன்னோடி அறிவியல் ஆராய்ச்சிக்கு உதவுவதற்காக நிறுவப்பட்டுள்ளன.

வானிலை மற்றும் பருவநிலை ஆராய்ச்சிக்கான உயர் செயல்திறன் கொண்ட கணினி அமைப்பையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறையில் 10 ஆயிரத்து 400 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

மகாராஷ்டிராவில் மூன்று எரிவாயு நிலையங்கள் உட்பட, நாடு முழுவதும் 20 திரவ இயற்கை எரிவாயு நிலையங்களையும் திரு நரேந்திரமோடி நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

<<<<>>>>

பணப்பரிவர்த்தனை முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில் தமிழக முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜிக்கு உச்சநீதிமன்றம் இன்று நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிகள் **Abhay Oka, Agustin George** அமர்வு இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அமலாக்கத்துறை அலுவலகத்தில் கையெழுத்திடுவது, விசாரணைக்கு ஒத்துழைப்பது உள்ளிட்ட நிபந்தனைகளோடு அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல், கால்பந்துப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் சென்னை அணி - முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறும் இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

மக்காவ் ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இன்று நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் மற்றொரு இந்திய வீரரான ஆயுஷ் ஷெட்டியை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Tasnim Mir -** ஜப்பானின் **Tomoka Miyazaki**-யை எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Treesa Jolly** – காயத்ரி கோபிசந்த் இணை, தைவான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஆசிய இளையோர் வில்வித்தைப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி தைவான் புறப்பட்டுச் சென்றது.

நாளை முதல் அக்டோபர் மூன்றாம் தேதி வரை தைபேய் நகரில் நடைபெறும் இப்போட்டிகளில் ஜூனியர், சப்-ஜூனியர் பிரிவுகளில் 32 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டி இன்று பெருவில் தொடங்குகிறது.

லிமாவில் இப்போட்டி அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

பாங்காக்கில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் -

ஜப்பானின் **Matsui** இணை - ஸ்பெயினின் **Alejandro Canas** – அர்ஜென்டினாவின் மார்கோ இணையை இன்று எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் 12.45 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>